பொது நூலகங்கள்

* 373 வினா திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக நூலக இயக்கத்தை மேம்படுத்துவதற்குரிய திட்டங்கள் ஏவையேனும் ஆய்வில் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மற்றும் (இ). நூலகங்களைப்பற்றி ஆலோசனைகளைக் கூறக் கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு மாநில நூலகக்குழு ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், நூலகப் பணியின் நோக்கத்தை நிறைவேற்றவும், மாநில அளவிலும், மாவட்ட அளவிலுமுள்ள நூலக அமைப்பைச் சீரதிருத்துவதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்து கூறவும் அண்மையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கை கிடைத்தபின் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

*374 Q.—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether the Tamil Nadu Government have constituted a Committee for the re-organisation of the Libraries in the State; and

(b) if so, the composition of the Committee?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இக்குழு கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டதாகும்—

(1) திரு. வி. என். சுப்பராயன் (முன்னாள் சென்னை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர்)—தலைவர்.

(2) திரு. பொன்னையா, முன்னாள் நூலக தனி அலுவலர் மற்றும் பெற்றோர்—ஆசிரியர் கழகச் செயலர்—உறுப்பினர்.

(3) திரு. சௌரிராயன், முன்னாள் தலைமை ஆசிரியர், கிறிஸ்துவக் கல்லூரி உயர் நிலைப்பள்ளி, சென்னை—உறுப்பினர்.

(4) திரு. டாக்டர் லெட்சுமணன் செட்டியார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்—உறுப்பினர்.

(5) கன்னிமாரா பொது நூலகத்தின் நூலகர்—உறுப்பினர் மற்றும் செயலாளர்.